NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 19 April 2017

## ஆளில்லா வானூர்தி மூலம் சிறிய பொட்டல விநியோகம் தொடர்பிலான ஆய்வு, சோதனை

# ஏர்பஸ், சிங்போஸ்ட் இணக்கம்

சிங்கப்பூரில் சிறிய பொட்டலங்களை ஏந்தியவாறு ஆளில்லா வானூர்தி பயணம் செய்து விநியோகம் செய்வது விரைவில் அன்றாடக் காட்சிகளாகத் தென்படவிருக்கின்றன.

இதன் தொடர்பிலான ஆய்வையும் சோதனையையும் மேற்கொள்ள ஏர்பஸ் ஹெலிகாப்டர்ஸ் நிறுவனமும் சிங்கப்பூர் போஸ்ட் நிறுவனமும் நேற்று இணக்கக் குறிப்பில் கையெழுத்திட்டன.

இதன் மூலம் நகரச் சூழலில் ஆளில்லா வானூர்தி மூலம் சிறிய பொட்டலங்களை விநியோகம் செய்யும் ஏர்பஸ் ஹெலிகாப்டர் திட்டத்துக்கு சிங்போஸ்ட் பங்காளியாகிறது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் ஏர்பஸ் ஹெலிகாப்டர்ஸ் நிறுவனமும் சிங்போஸ்ட் நிறுவனமும் இந்தச் சோதனையில் ஈடுபடும்.

அதன்படி, பல்கலைக்கழக வளாகத்தின் பல்வேறு இடங்களுக்கு நான்கு கிலோ கிராமுக்குக் குறைந்த எடையுள்ள சிறிய பொட்டலங்களை ஆளில்லா வானூர்திகள் சுமந்து சென்று, வானூர்தியில் முன்னரே பதிவு செய்யப்பட்ட இடத்தில் விநியோகம் செய்யும்.

ஆளில்லா வானூர்தியை உற்பத்தி செய்யும் பொறுப்பை ஏர்பஸ் ஹெலிகாப்டர்ஸ் நிறுவனமும் அதற்கான தளவாட ஆதரவு வழங்கும் பொறுப்பை சிங்போஸ்ட் நிறுவனமும் ஏற்றுக்கொள்ளும்.

"சிறப்பாக முன்னேற்றம் கண்டு வரும் இத்திட்டத்தில் சிங்போஸ்ட் நிறுவனத்தை எங்கள் தளவாடப் பங்காளியாக வரவேற்கிறோம். எங்கள் இரு நிறுவனங்களும் சேர்ந்து ஒரு துடிப்பான தானியங்கி பொட்டல விநியோக முறையைத் தொடங்க முனைப்புடன் இருக்கிறோம்," என்றார் ஏர்பஸ் ஹெலிகாப்டர்ஸ் நிறுவனத்தின் பொறியியல் பிரிவின் நிர்வாக உதவித் தலைவர் ஜோன் பிரிஸ் டுமோண்ட்.

திரு ஜோனும் சிங்போஸ்ட் நிறுவனத்தின் இடைக்கால தலைமை நிர்வாகி மெர்வின் லிம்மும் இணக்கக் குறிப்பில் கையெழுத்திட்டனர்.

"இத்திட்டம் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில் உயர்மாடிக் கட்டடங்களுக்கு இடையே ஆளில்லா வானூர்தி மூலம் ஒரு பாதுகாப்பான, துல்லியமான பொட்டல விநியோகத்தை மேற்கொள்ள வழி வகுக்கும்," என்றார் திரு மெர்வின் லிம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.